

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 324 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 21 – ஞாயிற்றுக்கிழமை 05 ஜூலை 2026 – கோவை ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 324 : Thiruvalluvar Year - 2057 - Aani 21 - Sunday 05 July 2026 - Kovai ★★ 10 Pages ₹ 5.00


# “நாங்க இருக்கோம்! மீண்டும் வருவோம்!”



## உங்களில் ஒருவன்

**என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

பொழுது புலர்ந்தாலே, எல்லோருக்கும் புத்துணர்ச்சி பிறக்கும். எனக்கோ, அந்தப் புத்துணர்ச்சியோடு புது உற்சாகமும் ஊக்கமும் கிடைக்கிறது. அதற்கு உடன்பிறப்புகளான நீங்களன்றி வேறு காரணமில்லை. தேர்தல் தோல்வியால் நான் துவண்டுவிடவில்லை என்றாலும், சோர்வு நம்மை அண்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய தலைமைப் பொறுப்பு என்னிடம் உள்ள கடமையை உணர்ந்து, நாள்தோறும் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்திற்கு வரத் தொடங்கினேன்.

“மக்கள் பணியே எல்லாவற்றையும் விட மகத்தானது. மக்களுக்காக உழைப்பதே நம் கடமை” என்று அங்கு திருவுருவச் சிலையென நிற்கும் பேரறிஞர் அண்ணாவும் - முத்தமிழறிஞர் கலைஞரும் நிதமும் அறிவுறுத்துகின்றனர்.

**“சோதனைகள் நமக்கென்ன புதிதா? அந்த நெருப்பாறுகளை நீந்திக் கடப்போம் வா” என்று, கம்பீரமாய் எழுந்து நிற்கும் கற்கோட்டையான அறிவாலயத்தின் வாயில் தினமும் வரவேற்கிறது.**

**உள்ளே நுழைந்ததும், “முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் உன்னை இயக்குவது நாங்கள்தான்; நீ இயங்குவது எங்களுக்காகத்தான். நம் பயணத்தின் வேகம் கூட வேண்டும். அதற்குப் புதிய பாதையில் நாம் பயணிக்கத் தொடங்க வேண்டும்” என்று விழிகளின் வழியே அன்புக் கட்டளையை இட்டவாறு உடன்பிறப்புகளான உங்களில் பலர் வரவேற்கின்றனர்.**

கழக நிர்வாகிகள் - கழக முன்னோடிகள் தொடங்கி, கழகத்தின் மீது பற்றுக் கொண்ட ஆதரவாளர்கள் எனக் குழந்தைகள் - மாணவர்கள் - இளைஞர்கள் - பெண்கள் - முதியோர் என நாள்தோறும் நூற்றுக்கணக்கானோர் என்னைக் காண வருகின்றனர். அப்படி வரும் ஒவ்வொருவரிடமும் பேசி, அவர்களது எண்ணங்களையும் - உணர்வுகளையும் நான் அறிந்து வருகிறேன்.

ஒவ்வொருவரின் குரலும் சொற்களும் தான் வேறுபடுகிறதே தவிர, அனைவரது உணர்வும் ஒன்றுதான். அவர்கள் என்னிடம் சொல்வதெல்லாம், “நாங்க இருக்கோம். நாம மீண்டும் வருவோம்!”. இந்தச் சொற்கள் போதுமே, எதிரிகளை ஒருசேர வீழ்த்தும் வலிமையைக் கொடுக்க!

இந்த வலிமையை நீங்கள் கொடுப்பதால்தானே 75 ஆண்டுகளைக் கடந்தும், கம்பீரமாக நிற்கிறோம்!

**வரலாற்றைத் திரும்பிப் பாருங்கள்... நம்மைப் போல் வெற்றி பெற்றவர்களும் இல்லை; தோல்வியைக் கண்டவர்களும் இல்லை. வெற்றியை நாம் தலையில் ஏற்றிக்கொண்டதுமில்லை; தோல்வியை இதயத்தில் தாங்கிக்கொண்டதுமில்லை! அதனால்தானே ஃபீனிக்ஸ் பறவையென மீண்டெழுகிறோம்.**

இன்று நாட்டில் நடக்கும் காட்சிகளைப் பாருங்கள்... ஒரு சில இயக்கங்களால் ஒரு தோல்வியைக்கூடத் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

> **நான் இன்று அயலகப் பயணம் மேற்கொள்ளவுள்ளேன். இரு வாரங்கள் அயலகத்தில் இருந்தாலும், அறிவாலயத்தில்தான் என் மனம் இருக்கும்; அங்கு நாள்தோறும் வரும் உங்கள் முகங்கள்தான் என் நெஞ்சில் நிழலாடும்!**

ஆனால் நாம், கொள்கை உறவாலும் - உடன்பிறப்பு எனும் நேசத்தாலும் பிணைக்கப்பட்டு, ஒரு குடும்பம் என ஆல் போல் வேரூன்றி வளர்ந்து நிற்கின்றோம்.

அப்படிப்பட்ட நம் இயக்கம் அடுத்த நூறாண்டுகளுக்குப் பயணிக்க வேண்டிய திசையைத் தீர்மானிக்க வேண்டியதும், உங்கள் உணர்வுகளை உள்வாங்கி அதில் புதிய பாதையை அமைக்க வேண்டியதும் தலைமைத் தொண்டனான என் கடமையல்லவா!

அதனால்தான், 38 பேர் கொண்ட 19 குழுக்களை அமைத்து, ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று, உங்களின் உள்ளங்களை அறிந்து வந்து, ஒளிவு மறைவின்றி என்னிடம் வழங்கச் சொன்னேன். அதுமட்டுமின்றி, உங்கள் குரல் ஒலித்திட எவ்விதத் தயக்கமும் கூடாதென “உடன்பிறப்பின் குரல்” என்ற இணையதளத்தையும் உருவாக்கினேன்.

நீங்களும் உங்கள் எண்ணங்களை உரிமையோடும் அக்கறையோடும் எடுத்துச் சொன்னீர்கள். என் கண்களும் காதுகளுமாய் வந்தவர்கள், அவற்றை என்னிடம் கொண்டு வந்து சேர்த்தனர்.

**காலை அறிவாலயத்தில் உங்களைச் சந்தித்து கருத்துகளைக் கேட்பதும், மாலை தொடங்கி இரவு வரை நீங்கள் பதிவு செய்த கருத்துகளைப் படிப்பது எனவும் - அன்றாடம் உங்களின் எண்ணங்களை ஆய்ந்தறிவதையே வழக்கமாகக் கொண்டிருந்தேன். உங்களது எண்ணங்களின் அடிப்படையில், கழகத்தின் மறுசீரமைப்பிற்காக - மறுகட்டுமானத்திற்காக, இளமையும் அனுபவமும் கலந்த “மறுசீரமைப்பு ஆலோசனைக் குழு”வையும் இப்போது அமைத்திருக்கிறேன்.**

இந்தக் குழு, கழக மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய மறுவரையறை, கழகத்தின் சார்பு அணிகளின் மறுசீரமைப்பு, தேர்தல் பணிக்குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்களில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்புகள், கிளை முதல் தலைமை வரை மறுசீரமைப்பு குறித்த பரிந்துரைகளை என்னிடம் வழங்கிட அறிவுறுத்தியுள்ளேன்.

“தி.மு.க.வைப் போல் அமைப்பு ரீதியான பலம் கொண்ட வேறு கட்சி, இந்தியாவிலேயே கிடையாது” என்பதை நான் பல்வேறு மேடைகளில் சொல்லி இருக்கிறேன். நான் மட்டுமல்ல, பிற இயக்கங்களைச் சேர்ந்த தலைவர்களும் - பிற மாநிலத் தலைவர்களும் - அரசியல் நோக்கர்களும்கூட இந்த உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அத்தகைய பலம் பொருந்திய அமைப்பு எழும்போது மலையென நிற்க வேண்டும்! கதிரவன் என ஒளி வீச வேண்டும்! அந்த ஒளியில் அடுத்த ஒரு நூற்றாண்டுக்கான நமது வரலாற்றையும் தமிழ்நாட்டின் புது வரலாற்றையும் நாம் ஒருசேர எழுத வேண்டும்!

இந்தப் பணிகளை எல்லாம் ஒப்படைத்துள்ள நிலையில்தான், நான் இன்று அயலகப் பயணம் மேற்கொள்ளவுள்ளேன். இருவாரங்கள் அயலகத்தில் இருந்தாலும், அறிவாலயத்தில்தான் என் மனம் இருக்கும்; அங்கு நாள்தோறும் வரும் உங்கள் முகங்கள் தான் என் நெஞ்சில் நிழலாடும்!

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2057
ஆனி 20
04-07-2026.

## மக்கள் பணியில் ஈடுபட்டிருந்த அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அவசர அவசரமாக கைது!

# “ஆணவம் அழிவிற்கு வழி” - தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

## ‘சினிமா ஆக்ஷன்’ பாணியில் போலீஸ் ராஜ்யம் நடத்துகிறார் முதலமைச்சர் என குற்றச்சாட்டு!

**சென்னை, ஜூலை 5 -**

**மக்கள் பணியில் ஈடுபட்டிருந்த முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணனை அவசர அவசரமாக கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது எனவும், சினிமா ஆக்ஷன் பாணியில் முதலமைச்சர் விஜய் போலீஸ் ராஜ்யம் நடத்துகிறார் என்றும் “ஆணவம் அழிவிற்கு வழி” எனவும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



தமிழ்நாட்டில் காட்டுமிராண்டித்தனமான ஆட்சியை நடத்தி வரும் த.வெ.க. அரசு, தனது பழி வாங்கும் நடவடிக்கையாக தி.மு.க. முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ.வைக் கைது செய்துள்ளது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள விஜய் தலைமையிலான பெரும்பான்மை இல்லாத த.வெ.க. அரசு, பல்வேறு அட்டூழியங்களில் ஈடுபட்டு வருகிறது. ஆட்சியை நடத்தத் தெரியாமல், முதல் நாளில் இருந்தே, முதலும் கோணல், முற்றும் கோணலுமாக இருந்து வருகிறது. மக்களுக்கான எந்தவொரு திட்டங்களையும் செயல்படுத்தத் தெரியாமல், அதனைத் திசை திருப்பும் வகையில் பல்வேறு தில்லு முல்லுகளில் ஈடுபட்டு வருகிறது.

குறிப்பாக பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுகளின் பேரில் தி.மு.க.வினர் மீது வழக்குப்பதிவு செய்வது, நடவடிக்கை எடுப்பது என முழு கவனத்தையும் அதில் மட்டுமே செலுத்தி வருகிறது.

### த.வெ.க. அரசின் சர்வாதிகாரம்!

அந்தவகையில், விஜயின் காட்டு மிராண்டித்தனமான அராஜக ஆட்சி, தனது பழிவாங்கும் நடவடிக்கையாக தி.மு.க. முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை கைது செய்துள்ளது. ஆத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் ஆய்வு மேற்கொள்ள வந்தபோது அனிதா ராதாகிருஷ்ணனை காவல்துறையினர் கைது செய்தனர். அப்போது,

த.வெ.க. அரசின் சர்வாதிகாரத்தனத்தைக் கண்டித்து தி.மு.க.வினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### கழகத் தலைவர் வலைதளப் பதிவு!

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

**முதலமைச்சரை அவதூறாகப் பேசினார் என்று முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களைக் கைது செய்துள்ளது ‘Take Diversion’ அரசு.**

**தொகுதியில் ஆய்வு மேற்கொண்டு மக்கள் பணியில் ஈடுபட்டு இருந்தவரை, அவசர அவசர மாகக் கைதுசெய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது?**

### பெண் புகாரில் தூயசக்தி ஆட்சி எடுத்த நடவடிக்கை என்ன?

**சினிமா ஆக்ஷன் பாணியில் போலீஸ் ராஜ்ஜியம் நடத்திக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர்!**

**கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்மணி திருவைகுண்டம் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் மேல் கூறியுள்ள புகாரில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத ‘தூயசக்தி ஆட்சி’, அந்த வழக்கில் ஏன் இந்த அவசரத்தைக் காட்டவில்லை?**

### குற்றங்களைத் தடுக்க வக்கில்லாத ஆட்சி!

**தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் கொலை, கொள்ளைகளையும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களையும் தடுக்க வக்கில்லாமல் அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை இணைத்துக் கொண்டிருக்கும் இந்த அரசின் மாற்றம் இதுதானா?**

**அவதூறு வழக்கில் கைது செய்வதாக இருந்தால், இன்றைய அமைச்சர்கள் பேசும் பேச்சுக்கு எல்லாம் எத்தனை பேரைக் கைது செய்வது?**

### குதிரை பேரத்தின் மூலம் ஆட்சியை நடத்தும் முதல்வர்!

**வாக்களித்த மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாமல், குதிரைபேரத்தின் மூலமாகத் தனது நாற்காலியைத் தக்க வைத்து விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளைக் கைது செய்து காலம் கடத்திவிடலாம் என நினைக்கிறார் முதலமைச்சர்.**

**“ஆணவம் அழிவிற்கு வழி!”**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.